# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)
*******

**முறையீட்டு மனு எண். 100/ந/2018**

**நாள் : 07/11/2018**

16.05.2018 நாளிட்ட தமிழக அரசியல் வார இதழ் செய்தி – முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

நகராட்சி ஆணையர்,
வாணியம்பாடி நகராட்சி,
வாணியம்பாடி. – எதிர் மனுதாரர்

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி நகராட்சி குறித்து "இது வாணியம்பாடி கோல்மால்' என்ற குறுந்தலைப்பில் " ரஜினிக்கு வெள்ளி வாள்...... நகராட்சிக்கு நெல்லை அல்வா" என்று தலைப்பிட்டு 16.05.2018 நாளிட்ட தமிழக அரசியல் வார இதழில் செய்தி வெளியானது. மேற்குறிப்பிட்ட செய்தி குறித்து வாணியம்பாடி நகராட்சி ஆணையரின் அறிக்கை , பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி நகராட்சி குறித்து "இது வாணியம்பாடி கோல்மால்' என்ற குறுந்தலைப்பில் " ரஜினிக்கு வெள்ளி வாள்......நகராட்சிக்கு நெல்லை அல்வா" என்று தலைப்பிட்டு 16.05.2018 நாளிட்ட தமிழக அரசியல் வார இதழ் செய்தியினை இம்முறைமன்ற நடுவம் தானாக முன்வந்து 100/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்தது. மேற்குறிப்பிட்ட வார இதழ் செய்தியில் வாணியம்பாடி நகராட்சி அலுவலர்கள் குறித்து கீழ்க்காணும் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன:-

(1) ரஜினி ரசிகரான வாணியம்பாடி நகராட்சி இளநிலை உதவியாளர் திரு குரு சீனுவாசன் , திருப்பத்தூரில் இரண்டு திரை அரங்குகளை குத்தகைக்கு எடுத்து டிஜிட்டல் மாற்றம் செய்து ரஜினியின் புதுப்படங்களை திரையிட்டது ;

(2) திரு குரு சீனுவாசன் மற்ற நகராட்சி ஊழியர்களுக்கு பரிசையும், பங்கையும் அளித்து வாயை அடைத்தது ;

(3) முத்துலட்சுமி ரெட்டி மகப்பேறு நிதி மற்றும் திடக்கழிவு மேலாண்மை நிதிகளை முறைகேடாகப் பயன்படுத்தியது ;

(4) நகராட்சியில், சாக்கடை சுத்தம் செய்ய ஒதுக்கப்பட்ட நிதியை அதற்குப் பயன் படுத்தாமலும், ஒப்பந்ததாரர்களுக்கும் பாக்கித் தொகை வழங்காமலும் உள்ளது.

2. மேற்குறிப்பிட்ட வார இதழ் செய்தி குறித்து நகராட்சி ஆணையர் விரிவான அறிக்கையினை 14.06.2018 நாளிட்ட கடிதத்தில் சமர்ப்பித்துள்ளார். நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதியின் பேரில் 2006–07 முதல் 2014–15 வரை உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை மூலமாக சிறப்புத் தணிக்கை மேற்கொள்ளப்பட்டதென்றும், அத்தணிக்கையில் ரூ. 57.77 கோடி நிதி முறைகேடு நடந்துள்ளது கண்டறியப் பட்டது என தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். மேலும், குற்றச்சாட்டுகளுக்கு உள்ளான நகராட்சி மேலாளர் திரு கோ. வெ. சுரேஷ், கணக்கர் / உதவியாளர் திரு கோ. முரளிகாந்தன் மற்றும் இளநிலை உதவியாளர் திரு D. குரு சீனுவாசன் ஆகியோர் மீது துறைரீதியான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு

நிரந்தரமாக பணியறவு செய்து ஆணையிடப்பட்டுள்ளது எனத் தெரிவித்து நகராட்சி நிர்வாக ஆணையரின் செயல்முறை ஆணைகளின் நகல்களை சமர்ப்பித்துள்ளார். மேலும், ரூ. 57.77 கோடி நிதி கையாடல் சம்பந்தமாக, தணிக்கை அறிக்கை மற்றும் விசாரணை அலுவலரின் அறிக்கையின் அடிப்படையில் தீவிரமான கிரிமினல் நடவடிக்கை மேற்கொள்ளும்படி சென்னை சி.பி.சி.ஐ.டி கூடுதல் காவல் துறை இயக்குநர் அவர்களுக்கு நகராட்சி நிர்வாக இயக்குநரின் 17.04.2018 நாளிட்ட நேர்முக கடிதம் அனுப்பப்பட்டுள்ளதென்று தெரிவித்து அக்கடித நகலினையும் நகராட்சி ஆணையர் சமர்ப்பித்துள்ளார். மேலும், 01.04.2006 முதல் 31.03.2015 முடிய உள்ள சிறப்புத் தணிக்கைக் காலத்தில் பணியாற்றிய நகராட்சி ஆணையாளர்கள், மேலாளர்கள், கணக்கர், இளநிலை உதவியாளர் மற்றும் காசாளர் ஆகிய பணியிடங்களில் பணியாற்றிய அலுவலகர்களின் பெயர்களும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளன. மேலும், நகராட்சிக்கு வந்த ரூ. 20 லட்சம் நிதியை நகரில் சாக்கடையை சுத்தம் செய்யாமலும், ஒப்பந்ததாரர்களுக்கு பாக்கி பணம் வழங்காமல் இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டினை மறுத்துள்ளதுடன் அதுபோன்ற நிதி எதுவும் நகராட்சிக்கு வழங்கப்படவில்லை எனவும் நகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

3. தமிழக அரசியல் வார இதழ் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலர்கள் மூவரையும் நிரந்தரப் பணியறவு செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், தணிக்கைத் துறை தெரிவித்த ரூ.57.77 கோடி நிதி முறைகேடு குறித்து சம்பந்தப்பட்ட அலுவலர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ள சி.பி.சி.ஐ.டி துறையினர் கோரப்பட்டுள்ளனர். மேலும், தணிக்கைக் காலத்தில் பணியாற்றிய அலுவலர்கள் குறித்தும் நகராட்சி நிர்வாக ஆணையருக்கு அனுப்பப்பட்டுள்ளது எனக் குறிப்பிட்டுள்ளார். மேற்குறிப்பிட்ட நிதி முறைகேடு ரூ.57. 77 கோடி என்பது மிகப் பெரிய தொகையாகும். இதற்கு பணி நீக்கம் என்பது சரியான தீர்வாக அமையாது. உரிய குற்றவியல் நடவடிக்கை மேற்கொண்டு சொத்துக்களை முடக்கிடவும் உரிய தண்டனை பெற்றுத் தருவதற்கும் இழப்பை திரும்பப் பெறுவதற்கும் உரிய தொடர் நடவடிக்கைகளை நகராட்சி நிர்வாக ஆணையர் எடுத்திட வேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.

2018– ஆம் ஆண்டு, நவம்பர் திங்கள், 7–ஆம் நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிட்டு ஆணையிடப்படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

சென்னை–600 032

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

3/12/2018

செயலாளர்.

3.12.18

3/12/18

பெறுநர்

1. நகராட்சி ஆணையர்,
வாணியம்பாடி நகராட்சி,
வாணியம்பாடி,
வேலூர் மாவட்டம்.

2. நகராட்சி நிர்வாக ஆணையர்,
நகராட்சி நிர்வாக ஆணையரகம்,
சேப்பாக்கம், சென்னை – 600 005.

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்,
பிரிவு அலுவலர்(நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு –3,
இ.கோ. / உதிரிகள்